IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.261/2019

DEPOSITION OF WITNESS P.W.8

| | | |
|---|---|---|
| NAME | : | MALATHY |
| HUSBAND NAME | : | SELVAM |
| VILLAGE | : | GOODA NAGARAM |
| OCCUPATION | : | DOCTOR |
| AGE | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 18th day of July 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கூடாநகரத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதரா நிலையத்தில் சிவில் சர்ஜனாக பணிபுரிந்து வருகிறேன். நான் 30.11.2015 அன்று குடியாத்தம் அரசு மருத்துவமனையில் 24 மணி நேர பணியில் இருந்த போது மாலை சுமார் 03.20 மணிக்கு கண்ணையன், வயது 33 த/பெ. சின்னசாமி, கே.வலசை கள்ளப்பாடி, நத்தாலமேடு அவருடைய உறவினர் பாபு என்பவர் அழைத்து வந்தார். அவர் 30.11.2015 அன்று மதியம் 2.30 மணிக்கு மேற்படி விலாசத்தில் தெரிந்த ஒரு ஆண் நபர் கத்தியால் தன்னை அடித்ததாகவும், அதனால் ரத்த காயம் ஏற்பட்டதாகவும் கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுய நினைவுடன் இருந்தார். அவருடைய இதய துடிப்பு 78/Mins ரத்த அழுத்தம் 110/70 mmhg என இருந்தது. அவருக்கு வலது புற தாடையில் ஒரு கிழிந்த காயம் 5x3x4 cm இருந்தது. அவருக்கு வாயில் வலி இருந்ததாக கூறினார். அவருக்கு இடது புற தோள் பட்டையில் ஒரு சிராப்பு காயம் 3x3 cm இருந்தது. அவருக்கு முதல் உதவி செய்து மேல் சிகிச்சைகாக வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டது. அவர் 30.11.2015 அன்று உள் நோயாளியாக அனுமதிக்கபட்டார். அவருக்க நுன் ஊடுகதிர் எடுக்கபட்டது. அதில் அவருடைய வலது பக்க தாடை எலும்பு உடைந்து இருந்தது. அவருக்கு அங்கு அறுவை சிகிச்சை 09.12.2015 அன்று அளிக்கப்பட்டது. 11.12.2015 அன்று டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். அங்கு இருந்து பல் மருத்துவரின் கருத்துப்படி மேற்கூரிய 1 மற்றும் 2வது காயம் கொடுங்காயம் என்று சான்றளிக்கப்பட்டது. 3வது காயம் சொற்ப காயம் என சான்றளிக்கபட்டது. த்றபோது என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்றிதழ் நான் வழங்கியது தான். அந்த காய சான்றிதழ் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

காயம் பட்ட நபருக்கு நான் முதல் உதவி மட்டும் தான் அளித்தேன். தொடர் சிகிச்சை எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான்._காயத்தின் தன்மையை வேலூர்

அரசு மருத்துவமனை மருத்துவரின் கருத்துப்படி சான்றளித்தேன் என்றாலும நான் காயம்பட்ட நபரை பரிசோதித்து அளிக்கவில்லை என்றாலும் சரிதான். மேற்சொன்ன முதலாவது மற்றும் 2வது காயம் ஏதாவது கூர்மையான பொருள் உரசும்போது அல்லது மோதும் போது ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. 3ஆவதாக ஏற்பட்ட சொற்ப காயம் ஏதாவது தரைப்பகுதி அல்லது சொரசொரப்பான இடத்தில் உரசும்போது ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

Sd/–R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.